சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் –தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) 2015–2016–இன் கீழ் 69 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு CCTV camera வாங்கி பொருத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (நிலை) எண். 21

நாள்.17.02.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047
மாசி மாதம் 5–ஆம் நாள்.
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்.த1/21864/2014 நாள்.07.01.2016.

******

ஆணை:

மேலே படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதத்தில் 2015–2016–ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதியின் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியரின் வருகை, கல்வி பயில்வது, இதர நடவடிக்கைகள் மற்றும் வெளியாட்கள் உள்ளே வருவதை கண்காணிக்கவும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் CCTV camera பொருத்துவது மிகவும் இன்றியமையாததாகும் என்றும், இதற்காக ரூ.35 இலட்சம் செலவில் 69 விடுதிகளுக்கு CCTV camera பொருத்துவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தினை 2015–2016–ஆம் ஆண்டு மாநில புதுமை நிதியின் கீழ் கூடுதல் செலவிற்கான முதல் மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ரூ.35 இலட்சம் நிதியில் மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநர் அனுமதி கோரியுள்ளார்.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, முதற்கட்டமாக, இணைப்பில் குறிப்பிடப்பட்ட 69 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் CCTV camera வாங்கி வழங்குவதற்கு ரூ.35 இலட்சம் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(i) தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டங்களுக்கு என ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை அத்திட்டப் பணிகளுக்கு மட்டுமே செலவிட வேண்டும்.

(ii) இத்திட்டத்திற்கென ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் செலவினம் போக மீதம் இருப்பின், அத்தொகையினை அரசு கணக்கில் ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

(iii) திறந்த ஒப்பந்த புள்ளி முறையில் (Central Open Tender System) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி வாங்க வேண்டும்.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225–ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01–ஆதிதிராவிடர் நலன்–277–கல்வி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்–KY–மாநில புதுமை நிதியின் கீழ் விடுதி மேலாண்மை அமைப்பை ஏற்படுத்துதல்–76 –கணினியும் துணைப் பாகங்களும் –01–வாங்குதல் (த.தொ.கு 2225–01–277–KY–7611)"

மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினை மாநில புதுமை நிதியிலிருந்து திரும்ப பெற ஏதுவாக அச்செலவினத்தை கோரிக்கை எண்.04 துறை குறியீடு 02–இல் தோற்றுவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் சரிக்கட்ட வேண்டும்.

""2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01–ஆதிதிராவிடர் நலன்–902 கழிக்கவும்– மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை –JA கழிக்கவும்–மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை 30.00 கணக்குகளிடையே மாற்றம். (த.தொ.கு 2225–01–902– JA –3000) "

கீழ்க்கண்ட பொது கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைப்பது மூலமாக:–

J–சேமநிதிகள் (&) வட்டி பெறாத சேமநிதிகள் 8229 00–வளர்ச்சி நல நிதிகள்–200 ஏனைய வளர்ச்சி நல நிதிகள்–BE மாநில புதுமை நிதி (த.தொ.கு.8229 00 200 BE 0006)

4. ஆதிதிராவிடர் நல இயக்குநர் மேற்கண்ட (பற்றுகள்) (2225 01 902 JA 30) என்ற புதிய கணக்குத் தலைப்பு மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேலும், புதிய கணக்கு தலைப்பு தொடங்கியது குறித்த பதிவுகளை மேற்கொள்ளுமாறு கருவூல கணக்கு அதிகாரி / சம்பளம் மற்றும் கணக்கு அதிகாரிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் பெற்று பத்தி 2–இல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி இணைப்பில் குறிப்பிட்டவாறு சம்பந்தப்பட்ட விடுதிகளுக்கு ஒப்பந்ததாரர் மூலமாக CCTV camera நிறுவி, அதன் அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், மேலும், இப்பணியானது இவ்வாணை வெளியிடப்பட்டதிலிருந்து 3 மாதத்திற்குள் நிறைவேற்றப்பட்டு விடுதிகளுக்கு CCTV camera ஒப்பந்ததாரரால் பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் செயல்படுத்தப்பட்ட பின்னர், அது குறித்த அறிக்கையினை இனவாரியாக செலவின விவரங்களுடன் அரசுக்கு உடன் அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அதன் அ.சா.கு எண்.3993/ஆதி(ம)பந துறை/2016–1, நாள். 12.02.2016–இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசுச் செயலாளர்.

பெறுநர்:–

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–35/9/18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:–

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின்முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஆதி(ம)பந) (வ.செ.பொது II) துறை, சென்னை–9.
திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
ஆதி (ம)பந துறை செயலர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சார்புச் செயலாளர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009

இணைப்பு

அரசாணை (நிலை) எண்.21, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை நாள்.17.02.2016

2015–2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ்
CCTV Camera பொருத்தப்பட வேண்டிய ஆதிதிராவிடர் நல விடுதிகளின் விவரம்

| வ. எண் | மாவட்டம் | இடம் | விடுதி |
|---|---|---|---|
| 1 | சென்னை | நந்தனம் | கல்லூரி மாணவர்கள் விடுதி |
| 2 | சென்னை | கோடம்பாக்கம் | கல்லூரி மாணவர்கள் விடுதி |
| 3 | சென்னை | சி.ஐ.டி.நகர், சென்னை–15 | எம்.சி.ராஜா கல்லூரி மாணவர்கள் விடுதி |
| 4 | சென்னை | பெரம்பூர்@வில்லிவாக்கம் | கல்லூரி மாணவர்கள் விடுதி |
| 5 | சென்னை | இராயபுரம் | கல்லூரி மாணவியர்விடுதி |
| 6 | சென்னை | இராயபுரம் | கல்லூரி மாணவியர்விடுதி |
| 7 | சென்னை | இராயபுரம் | கல்லூரி மாணவியர்விடுதி |
| 8 | சென்னை | இராயபுரம் | முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி |
| 9 | சென்னை | இராயபுரம் | முதுகலை கல்லூரி மாணவர் விடுதி |
| 10 | சென்னை | இராயபுரம் | ஐ.டி.ஐ மாணவியர் விடுதி |
| 11 | சென்னை | வேப்பேரி, வில்லிவாக்கம் | ஐ.டி.ஐ மாணவர் விடுதி |
| 12 | சென்னை | சி.ஐ.டி.நகர், சென்னை–15 | எம்.சி.ராஜா கல்லூரி மாணவர்கள் விடுதி (இணைப்பு) |
| 13 | சென்னை | வில்லிவாக்கம் | ஐ.டி.ஐ மாணவர் விடுதி |
| 14 | கடலூர் | சி.மொட்லூர் | கல்லூரி மாணவர் விடுதி |
| 15 | கடலூர் | சிதம்பரம் | முதுகலைக் கல்லூரி மாணவர் விடுதி |
| 16 | கடலூர் | கடலூர் | கல்லூரி மாணவர் விடுதி |
| 17 | கடலூர் | கடலூர் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 18 | கடலூர் | சிதம்பரம் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 19 | கடலூர் | கடலூர் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 20 | கடலூர் | சிதம்பரம் | ஆதிந பள்ளி மாணவியர் விடுதி |
| 21 | திருவள்ளூர் | திருத்தணி | கல்லூரி மாணவர் விடுதி |
| 22 | திருவள்ளூர் | திருத்தணி | கல்லூரி மாணவியர் விடுதி |
| 23 | திருவள்ளூர் | பொன்னேரி | கல்லூரி மாணவர் விடுதி |
| 24 | திருவள்ளூர் | பொன்னேரி | கல்லூரி மாணவியர் விடுதி |
| 25 | திருவள்ளூர் | திருவள்ளூர் | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |
| 26 | திருவள்ளூர் | பொன்னேரி | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |
| 27 | திருவள்ளூர் | பூந்தமல்லி | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |
| 28 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | கல்லூரி மாணவர் விடுதி |
| 29 | திருவண்ணாமலை | செய்யார் | கல்லூரி மாணவர் விடுதி |
| 30 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | கல்லூரி மாணவியர் விடுதி |
| 31 | திருவண்ணாமலை | தூக்கபேட்டை | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |
| 32 | திருவண்ணாமலை | ஆரணி | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |

| | | | |
|---|---|---|---|
| 33 | திருவண்ணாமலை | போளூர் | ஆதிந பள்ளி மாணவியர் விடுதி |
| 34 | திருவண்ணாமலை | சேத்பட்டு | ஆதிந பள்ளி மாணவியர் விடுதி |
| 35 | விழுப்புரம் | திண்டிவனம் | கல்லூரி மாணவர் விடுதி |
| 36 | விழுப்புரம் | விழுப்புரம் | கல்லூரி மாணவர் விடுதி |
| 37 | விழுப்புரம் | திண்டிவனம் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 38 | விழுப்புரம் | விழுப்புரம் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 39 | விழுப்புரம் | கள்ளக்குறிச்சி | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |
| 40 | விழுப்புரம் | தியாகதுருகம் | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |
| 41 | விழுப்புரம் | உளுந்தூர்பேட்டை | ஆதிந பள்ளி மாணவர் விடுதி |
| 42 | திருநெல்வேலி | திருநெல்வேலி | கல்லூரி மாணவியர் விடுதி |
| 43 | திருநெல்வேலி | குத்தாலம் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 44 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | கல்லூரி மாணவர் விடுதி |
| 45 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | கல்லூரி மாணவியர் விடுதி |
| 46 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | பள்ளி மாணவியர் விடுதி |
| 47 | திருநெல்வேலி | கல்லிடைக்குறிச்சி | பள்ளி மாணவர் விடுதி |
| 48 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | முதுகலை கல்லூரி மாணவர் விடுதி |
| 49 | விருதுநகர் | விருதுநகர் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 50 | விருதுநகர் | அருப்புக்கோட்டை | கல்லூரி மாணவர் விடுதி |
| 51 | விருதுநகர் | சாத்தூர் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 52 | விருதுநகர் | விருதுநகர் | முதுகலை கல்லூரி மாணவர் விடுதி |
| 53 | விருதுநகர் | அருப்புக் கோட்டை | பள்ளி மாணவியர் விடுதி |
| 54 | விருதுநகர் | சாத்தூர் | பள்ளி மாணவர் விடுதி |
| 55 | விருதுநகர் | விருதுநகர் | பள்ளி மாணவர் விடுதி |
| 56 | சேலம் | மணக்காடு | கல்லூரி மாணவியர் விடுதி |
| 57 | சேலம் | சேலம் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 58 | சேலம் | சேலம் | கல்லூரி மாணவர் விடுதி |
| 59 | சேலம் | சேலம் | சட்டக் கல்லூரி மாணவர் விடுதி |
| 60 | சேலம் | ஆத்தூர் | பள்ளி மாணவர் விடுதி |
| 61 | சேலம் | வடசென்னிமலை | கல்லூரி மாணவர் விடுதி |
| 62 | சேலம் | தலைவாசல் | கல்லூரி மாணவியர் விடுதி |
| 63 | திருச்சி | திருச்சி | கல்லூரி மாணவியர் விடுதி |
| 64 | திருச்சி | திருச்சி | கல்லூரி மாணவர் விடுதி |
| 65 | திருச்சி | திருச்சி | முதுகலை கல்லூரி மாணவர் விடுதி |
| 66 | திருச்சி | முசிறி | கல்லூரி மாணவியர் விடுதி |
| 67 | திருச்சி | திருவெறும்பூர் | ஐ.டி.ஐ மாணவர் விடுதி |
| 68 | திருச்சி | திருச்சி | பள்ளி மாணவியர் விடுதி |
| 69 | திருச்சி | துறையூர் | பள்ளி மாணவர் விடுதி |

I (1)

பிரிவு அலுவலர்.